**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.3 (LW-4)**
**SC.NO.75/2018**

| | | |
|---|---|---|
| **Name** | : | சுரேஷ்பாபு |
| **Father Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling /Occupation** | : | சிறப்பு உதவி ஆய்வாளர் / பாகாயம் |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of** 19.11.2024

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் மூவர் ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது பாகாயம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிகிறேன். கடந்த 21.03.2006 அன்று பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு. சீனிவாசன் என்பவர் தலைமையில் 10 காவலர்கள் அரசு வாகனம் டி.என்.23 0394 என்ற வாகனத்தில் வேலூர்

மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பகல் 3.30 மணிக்கு அறிக்கை செய்தோம். அதன் பிறகு வேலூர் வடக்கு விரிஞ்சிபுரம் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் தாலுக்க உதவி ஆய்வாளர் உடன் விரிஞ்சிபுரம் காவல் சென்றோம். அன்று சாராய வழக்கு சம்மந்தமாக டி.எஸ்.பி அறிவுரை வழங்கினார். அதன் பிறகு டி.எஸ்.பி தலைமையில் அனைவரும் விரிஞ்சிபுரம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட சிவநாதபுரம், கைலாய மலை, திப்பை சென்றோம். அங்கு சாராய வழக்கு விசாரணை செய்த போது பெயர் விலாசம் தெரியாத நான்கு நபர்கள் மலை அடிவாரத்தில் சாரயாம் விற்பதாக தகவல் தெரிந்தது. அதன்பிறு பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மணி(எ) நடுபையன், சடையன், வெங்கடேசன், முனிரத்தினம் ஆகியோர்கள் மலைஅடிவாரத்தில் சாரயாயம் விற்பனை செய்து கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் ஆஜர் எதிரிகள் தான். அதில் ஒருவர் பெயர் வெங்கடேசன் மட்டும் நீதிமன்றத்தில் இல்லை( 3ஆவது எதிரி இறந்து விட்டார்).

அதன்பிறகு எங்களை பார்த்து சடையன் என்பவர் தேவிடியா கையா, ஓங்கோத்தா தேவிடியா பையா, போலீஸ் நாய்களே என்று கெட்ட வார்த்தையில் திட்டி கொண்டு நாட்டு துப்பாக்கி எடுத்து கொண்டு எங்களை நோக்கி சுட செய்தார்.அப்போது எஸ்.ஐ.சீனிவாசன் சடையனை பிடிக்க போது எஸ்.ஐ பார்த்து சுட்டார். இரண்டாவது எதிரி

சடையான சாட்சியாக காட்டினார். சடையன் பயன்படுத்திய துப்பாக்கி நீளமாக உள்ளது தான்.

அதன்பிறகு தற்காப்புக்காக துணை கண்காணிப்பாளர் அவர்கள் பெயர் நினைவில்லை. மணி என்பவரை வலது காலில் டி.எஸ்.பி சுட்டார்.அதன்பிறகு என்னுடன் பணிபுரியும் அந்தோணி ராஜ், வெங்கடேசனை பிடிக்க போகும் போது கத்தியால் இடது கை, வலது கை, மார்பின் மீது வெட்டினார். அதனால் ரத்த காயம் ஏற்பட்டது. அதன்பிறகு அங்கிருந்த காவலர்கள் குகன், மற்றொரு காவலர் பெயல் நினைவில்லை. வெங்கடேசனை பிடித்து கொண்டு மணி என்பவரை அழைத்து கொண்டு காவலர் அந்தோணி ராஜ்யையும் அழைத்து கொண்டு சம்பவ இடத்தில் இருந்து இரண்டு டியுப் மூட்டையில் சாராய பாக்கெட்டும், பணம் ரூ.150/- மற்றும் கத்தி, துப்பாக்கி எடுத்துக் கொண்டு வந்து டி.எஸ்.பி யிடம் ஆஜர் செய்தோம். அங்கிருந்தவர்களை அடிப்பட்டவர்களை அழைத்து கொண்டு அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். இது சம்மந்தமாக டி.எஸ்.பி. விசாரணை செய்தார். வெங்கடேசன் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தி இது தான். அது நீதிமன்றத்தில் உள்ளது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஏற்கனவே சாட்சிகள் அ.சா.1 மற்றும் 2 குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருப்பதாலும், அவர்களை குறுக்கு விசாரணை செய்த பிறகு மற்ற சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி

கோரி மனு அனுமதிக்கப்படுகிறது. எனவே குறுக்கு விசாரணை தற்போது இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2024.11.20 17:20:32 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.